பக்கங்கள் 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் - 10 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 19 திங்கட்கிழமை 29.12.2025 கதிர் 050

## இது ரகசியம் அல்ல!

என்பிபி ஆளும்தரப்பு ஏனைய கட்சிகள் மீது என்னென்ன குற்றச்சாட்டுக்களை எல்லாம் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னர் முன்வைத்ததோ, 2

## அவசரகால நிலை நீடிப்பு

பொதுமக்களின் அவசரகால நிலைமையை கருத்திற் கொண்டு பிரசுரிக்கப்பட்ட அவசரகால நிலை வர்த்தமானியின் செல்லுபடி காலம் தற்போதைய நிலைவரத்தை கருத்திற்கொண்டு நீட்டிக்கப்பட்டுள்ளது.

அரசுத் தலைவரின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்கவின் கையொப்பத்துடன் நேற்று (28) முதல் இலங்கையில் பொது அவசரகால நிலையை நீட்டிக்கும் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 2

## அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு ஜனநாயகத்திற்கு கடும் அச்சுறுத்தல்

### முன்னிலை சோசலிசக் கட்சி கடும் கண்டனம்

**ஆளும்தரப்பு கொண்டுவரவுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும்சட்டம்நாட்டின்ஜனநாயகத்தை கடுமையாக அச்சுறுத்துவதாக அமைந்துள்ளது என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட குற்றம்சாட்டியுள்ளார்.**

**நுகேகொடையில் உள்ள முன்னிலை சோசலிசக் கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**



இயற்கை பேரிடரினால் முழுச் சமூகமும் திகைத்துப் போயிருக்கும் ஒரு தருணத்தை பயன்படுத்தி, தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு புதிய ஒடுக்குமுறைச் சட்டமொன்றை நிறைவேற்றத் துடிக்கிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்ற வாக்குறுதியுடன்தான் இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. ஆனால், 'பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்ட வரைபு' என்ற பெயரில் முன்னைய சட்டத்தை விடவும் அபாயகரமான சட்டத்தை கொண்டுவரத் தயாராகின்றனர்.

இந்தப் புதிய சட்டத்தின்படி, ஆளும்தரப்பை ஒரு விடயத்தைச் செய்யுமாறு அல்லது செய்ய வேண்டாம் என அழுத்தம் கொடுப்பது பயங்கரவாதச் செயல் என வரையறுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, அழிவுகரமான 'சர்வதேச நாணய நிதியத்தின்' ஒப்பந்தத்திலிருந்து விலகுமாறு எவராவது ஆளும்தரப்பிற்கு

அழுத்தம் கொடுத்தால், அவர் பயங்கரவாதியாக முத்திரை குத்தப்பட்டு கைது செய்யப்படலாம். வெளிநாட்டு ஆளும்தரப்புகளுக்கு அழுத்தம் கொடுப்பதும் கூட இச்சட்டப்படி குற்றமாகும்.

தடுப்புக் காவல் உத்தரவுகளில் கையெழுத்திடும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. பாதுகாப்புச் செயலாளர் என்பவர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்லர்.

ஒரு நபரைத் தடுப்பில் வைக்கும் நீதிமன்ற அதிகாரத்தை அரசியல் நியமனம் பெறும் ஒருவருக்கு வழங்குவது பாரதூரமானது. அத்துடன், சட்டமா அதிபர் சந்தேகநபர்களுடன் பேரம் பேசும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டால் இரு வருட மறுவாழ்வு என்றும், இல்லையெனில் 10 வருட சிறை என்றும் அச்சுறுத்தும் அதிகாரம் இச்சட்டத்தின் 56 ஆவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ளது

சட்டத்தின் 63 ஆவது பிரிவின்படி, அரசுத் தலைவர் எந்தவொரு அமைப்பையும் தடை செய்ய முடியும். அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதும் பயங்கரவாதச் செயலாகக் கருதப்படும். அதுமட்டுமன்றி, விசேட காரணங்கள் இன்றி இராணுவத்தினர் வீடுகளுக்குள் நுழைந்து சோதனை செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் பொலிஸார்கூட நீதிமன்ற அனுமதியின்றி இதனைச் செய்ய முடியாது இருந்தது.

மக்களின் தொலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள் மற்றும் சமூக வலைத்தளங்களைப் பரிசோதிக்கும் அதிகாரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் ஆளும்தரப்பு டிஜிட்டல் மயமாக்கல் பற்றிப் பேசியதன் உண்மையான நோக்கம் இதுதான். மக்கள் எங்கு செல்கிறார்கள், யாருடன் பேசுகிறார்கள் என்பதைக் கண்காணிக்கவே இந்த ஏற்பாடாகும். முகநூலில் ஒரு போராட்டத்திற்கு அழைப்பு விடுப்பவர்கூட பயங்கரவாதியாகக் கைது செய்யப்படலாம்.

இடர்க் காலங்களில் தொலைபேசி 2

## அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபை விமர்சிப்பவர்கள் பரிந்துரை வைக்கவும்

### நீதி அமைச்சர் கருத்து



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கி ஜனநாயகம்இ தனி மனித உரிமையை பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம் இயற்றப்படும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் மீதான விமர்சனங்கள் புதிய சட்டத்தில் உள்வாங்கப்படாது. குறைப்பாடுகளை முன்வைப்பவர்கள் சிறந்த பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நீதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைபு குறித்து வினவியபோது 2

## ஊடக சுதந்திரத்தை முடக்கினால் மக்களை வீதிக்கு இறக்குவோம்

### ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

ஊடக சுதந்திரத்தை முடக்கும் வகையில் ஆளும்தரப்பு செயற்பட்டால் எதிராக மக்களை வீதிக்கு இறக்குவோம். பொலிஸார் ஒருதலைபட்சமாகவே செயற்படுகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஜனநாயகம் மற்றும் ஊடகச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதாக குறிப்பிட்டுக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு தற்போது ஊடகங்களுக்கு எதிராக செயற்படுகிறது. 2

## தரமற்ற மருந்தை இறக்குமதி செய்ய ஆளும்தரப்புக்கு ஆணை தரவில்லை

### எதிர்க் கட்சித் தலைவர் சீற்றம்



மருந்துப் பொருள் மாபியாவைத் தொடர்வதற்கு மக்கள் ஆளும்தரப்பிற்கு ஆணை வழங்கவில்லை. தரமற்ற மருந்துப் பொருட்கள் மோசடியை ஒழிப்பதற்கு ஆளும்தரப்பு எடுக்கும் சிறந்த சகல 2

## ஜனவரி 9 வரையும் டக்ளஸிற்கு மறியல்

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை 2026 ஜனவரி 9 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று (28) கம்பஹா மேலதிக நீதிவான் பத்மா அமரதுங்கவிடம் முன்னிலைப்படுத்தப்பட்டார்.



குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் மனிதப் படுகொலைகள் தொடர்பான விசாரணை பிரிவு அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியது.

டிசெம்பர் 26 கைது செய்யப்பட்ட டக்ளஸ் தேவானந்தா பின்னர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பயங்கரவாத

தடைச் சட்டத்தின் கீழான 72 மணிநேர தடுப்பு காவலின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தார். எனினும் நேற்று அவர் கம்பஹா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவில்லை. மாற்றமாக 1916 ஆம் ஆண்டின் 6

## வடக்கு கிழக்கில் விகாரைக் கட்டுமானங்கள் இலங்கையில் அமைதியைக் கொண்டுவராது

### ஈபிஆர்எல்எவ் காட்டம்

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் திட்டமிட்டு சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் பௌத்த ஆலய கட்டுமானங்கள் ஒருபோதும் இலங்கையில் அமைதியைக் கொண்டுவராது என்றும் இலங்கையின் வளர்ச்சிக்கு பங்களிக்காது என்றும் தெரிவித்துள்ள ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் முறைமை மாற்றத்தை முன்வைத்து ஆட்சிபீடம் ஏறியுள்ள இடதுசாரி ஜனநாயகம் பேசும் தற்போதைய அரசு அத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தி நாட்டின் நிலையான அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் சிங்கள பௌத்த மக்கள் வாழாத இடங்களில் அடாத்தாகப் பிடித்த பல காணிகளில் இராணுவத்தினரின் உதவியுடன் புத்தகோயில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்பொழுது ஆட்சியிலிருக்கின்ற தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பானது இவற்றைத் தடுத்து நிறுத்தாமல் சட்டவிரோதமாகக் கட்டப்படும் 2

## இந்திய அமைச்சருடனான சந்திப்பில் சமஷ்டி பற்றியும் தமிழ் அரசு பேசியது

### தெளிவுபடுத்துகிறார் அதன் தலைவர் சிவஞானம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சமஷ்டிக் கட்சி, ஆகவே சமஷ்டியை பற்றி நாங்கள் பேசாமல் விடுவோமா? சந்திப்பின் கடைசிப் பகுதியில் அது பற்றியும் நாம் பேசினோம் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் கேள்வி எழுப்பியதுடன் இந்திய வெளியுறவு நாங்கள் அதனை வலியுறுத்தினேன் என தெரிவித்தார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக கட்சித் தலைவர் சிவஞானம் நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய அயலுறவுத்துறை துறை அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பில் அமைச்சரிடம் மனு கையளிக்கப்படவில்லை எனவும் உயராணையரிடமே மனு கையளிக்கப்பட்டதாகவும் 6

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதே குற்றச்சாட்டுக்கள் எல்லாம் அதன் மீதும் ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலத்திற்குள்ளேயே சுமத்தப்பட்டு வருகின்றன.

இதுவொரு “பச்சைப் பொய் மூடை” ஆளும்தரப்பு, மருந்துக் கொள்வனவு மோசடியை அனுமதிக்கிறது, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அப்படியெ ஏற்கிறது, மேற்குலக மற்றும் இந்தியாவின் அதிகாரங்களுக்கு வளைந்து கொடுகிறது, இந்தியாவுடன் செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தை மக்களுக்கு வெளிப்படுத்தாமல் மறைக்கிறது, ஊடக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கிறது, பேரிடரை எதிர்கொண்டு இழப்புக்களைத் தடுக்கத் தவறிவிட்டது, தமிழ் மக்களுக்கான தீர்வைத் தரத் தவறிவிட்டது, மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கிறது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்காமல் அதைப் பயன்படுத்துகிறது, பேரிடர் பாதித்த மக்களுக்கான உதவிகளைச் சரிவர வழங்கவில்லை, சட்டவிரோத விகாரைகளை அகற்றவில்லை என்று ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. இது போதாது என்று, ஆளும்தரப்பினரின் சொத்து விவரங்கள் வெளியானதைத் தொடர்ந்து ஏழைகளின் பங்காளிகள் எனப்பட்ட ஜேவிபியினருக்கு எப்படி இவ்வளவு சொத்துக்கள் என்கிற குற்றச்சாட்டும் கிளம்பியது. இப்படி தம்மீதான குற்றச்சாட்டுக்கள் மலை போலக் குவிந்து வரும் நிலையில் மக்கள் மத்தியில் தமது விம்பத்தை தக்க வைப்பதற்கான முயற்சிகளை ஆளும்தரப்பு அவ்வப்போது ஒரு கண்துடைப்புக்காக எடுத்து வருகின்றது.

அந்த மாதிரியான ஒரு முயற்சி பற்றிய தகவலைத்தான் இன்று உங்களோடு பகிர்ந்துகொள்ளப் போகின்றேன். தற்போதைய ஆளும்தரப்பின் ஆறு அமைச்சர்களின் சொத்துக்கள் குறித்து பணமோசடி சட்டத்தின் கீழ் விரிவான விசாரணையை தொடங்க லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு முடிவு செய்துள்ளதாம்.

அதன்படி, ஐந்து அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் ஒரு பிரதி அமைச்சர் ஆகியோர் சொத்துக்களை எப்படி வாங்கினார்கள் என்று ஆணைக்குழு விசாரிக்கப் போகிறதாம்.

அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, வசந்த சமரசிங்க, குமார ஜெயக்கொடி, சுனில் ஹந்துன்னெத்தி, நளிந்த ஜெயதிஸ்ஸ மற்றும் துணை அமைச்சர் சுனில் வட்டகல ஆகியோருக்கு எதிராகவே விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாக லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஊழல் மற்றும் வீண்விரயத்திற்கு எதிரான குடிமக்கள் சக்தியின் தலைவர் ஜமுனி கமந்த துஷார ஆணைக்குழுவில் சமர்ப்பித்த முறைப்பாட்டுக்கு அமையவே இந்த விசாரணைகள் நடத்தப்படவுள்ளனவாம். முறைப்பாடு தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்ய ஜமுனி கமந்த துஷாரவை நாளை செவ்வாய்க்கிழமை முன்னிலையாகுமாறு ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

ஏற்கனவே ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும் இடையிலான முரண்பாட்டிலேயே பொலிஸார் ஆளும்தரப்புக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார்கள் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், அமைச்சர்களுக்கு எதிரான விசாரணைகள் மட்டும் நீதியாக நடக்கும் என்று ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம் என்னதான் நடக்கின்றது என்று.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் (ஐ.ஜி.பி) தேசபந்து தென்னகோன் ஆகியோர் சம்பந்தப்பட்ட இரண்டு உயர்மட்ட வழக்குகளிலும், விசாரணைகள் முடிவடைந்தவுடன், மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்யவேண்டும் என்று கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் (ஏ.எஸ்.ஜி) திலீப பீரிஸ் முன்மொழிந்துள்ளாராம்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் தனது மனைவியின் கலாநிதிப் பட்டம்பெறும்விழாவில் கலந்துகொள்ள லண்டனுக்குச் செல்ல அரசு நிதியை தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு மற்றும் முன்னாள் ஐ.ஜி.பி தென்னகோன் சம்பந்தப்பட்ட ‘வெலிகம று15’ ஹோட்டல் துப்பாக்கிச் சூடு ஆகியவை தொடர்பான வழக்குகளையே மூன்று நீதிபதிகள் அமர்வு முன்பு விசாரிக்கவேண்டும் என்று பீரிஸ் பரிந்துரைத்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்கத்தினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு இடையேயான உயர்மட்டக் கூட்டத்தின்போது இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டதாக ‘சண்டே டைம்ஸ்’ செய்தி வெளியிட்டுள்ளது. ரணில் விக்ரமசிங்க மற்றும் தென்னகோன் ஆகியோர் முன்னர் வகித்த மூத்த பதவிகளைக் கருத்தில் கொண்டு, இரண்டு வழக்குகளையும் விசாரிக்க தனித்தனி விசாரணை நீதிபதிகளை நியமிக்க உதவி காவல்துறை கண்காணிப்பாளர் பரிந்துரைத்திருந்தார்.

இருப்பினும், இரண்டு சம்பவங்கள் குறித்த விசாரணைகளும் இன்னும் முழுமையாக முடிக்கப்படவில்லை என்பது கூட்டத்தில் குறிப்பிடப்பட்டது. அதன்படி, விசாரணைகள் முடிந்ததும் தொடர்புடைய விசாரணைகளின் சாராம்சம் குறித்த விவரங்களைச் சமர்ப்பித்த பின்னரே இந்தத் திட்டம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று சட்டமா அதிபர் அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

வெலிகம று15 ஹோட்டல் துப்பாக்கிச் சூடு விசாரணையை மேற்பார்வையிடும் துணை சொலிசிட்டர் ஜெனரல் யுஹான் அபேவிக்ரம, டிசம்பர் 31க்கு முன்னர் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று சட்டமா அதிபர் மேலும் அறிவுறுத்தினார். அந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தற்போது பெரும்பாலும் முடிவடைந்துள்ளதால், தேசபந்து தென்னகோன் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் எட்டு காவல்துறை அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகளை பதிவு செய்வதை விரைவுபடுத்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

கூட்டத்தின் போது, தென்னகோன் வழக்கில் சில சந்தேகநபர்களைச் சாட்சிகளாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் எழுப்பப்பட்டன் இருப்பினும், இந்த முன்மொழிவு நிராகரிக்கப்பட்டது.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் சம்பந்தப்பட்ட வழக்கு தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றமும் மதிப்பாய்வு செய்யப்பட்டது

ரணிலின் லண்டன் பயணம் தொடர்பாக விசாரிக்க லண்டனுக்குச் சென்ற சிஐடி குழுவைப் பொறுத்தவரை, விசாரணையின் அந்தப் பிரிவு தொடர்பான அறிக்கைகள் கிடைக்கும் வரை எந்தவொரு முடிவு எடுப்பதையும் ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இடிமின்னல்

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டம், 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றால் திருத்தப்பட்ட பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 40) பிரிவு 2 ஆல் அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்கவுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பாகத்தின் விதிகள் இலங்கை முழுவதும் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்க அரசுத் தலைவரினால் முழு நாட்டுக்கும் செல்வாக்கு செலுத்தும் வகையில் அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டது.

பொது பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், நாட்டின் இயல்பான செயல்பாட்டைப் முன்னெடுப்பதற்கும், பொது மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைக விநியோகத்தின் தொடர்ச்சியைப் பாதுகாப்பதற்கும் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த மாதம் தித்வா சூறாவளித் தாக்கம் தீவின் பெரும்பாலான பகுதிகளில் பேரழிவை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து கடந்த நவம்பர் 29 அன்று நாடு முழுவதும் பொது அவசரநிலையை அறிவிக்கும் வர்த்தமானியை அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்க வெளியிட்டார்.

## அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசுத் தலைவர் ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆட்சியில் ஆறு மாத காலத்தை வரையறுத்து பயங்கரவாத தடைச்சட்டம் உருவாக்கப்பட்டது. இந்தச் சட்டம் தனிமனித சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்துக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டது. இந்தச் சட்டத்தால் நாங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயகம் அம்சங்கள் மற்றும் மனித உரிமைகளை உள்ளடக்கிய வகையில் புதிய சட்டம் ஒன்றை இயற்றுவோம் என்று மக்களுக்கு வாக்குறுதியளித்தோம்.

இதற்கமைய பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது குறித்து ஆராய்ந்து விதப்புரைகளை முன்வைப்பதற்காக அரசுத் தலைவர் சட்டத்தரணி ஹர்ச குலரத்ன தலைமையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. கடந்த ஆளும்தரப்பு தயாரித்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய அறிவுறுத்தல்கள்இ தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்து ஜனநாயகம், தனி மனித உரிமையை பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம் இயற்றப்படும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் மீதான விமர்சனங்கள் புதிய சட்டத்தில் உள்வாங்கப்படாது. குறைப்பாடுகளை முன்வைப்பவர்கள் சிறந்த பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும்.

புதிய சட்டத்தில் மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும். சகல விடயங்களுக்கும் குறைகளை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருந்தால் எந்த பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது என்றார்.

## ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆளும்தரப்பின் முறைகேடான செயற்பாடுகளை ஊடகங்கள் சுட்டிக்காட்டும் போது அதனை ஏற்றுக்கொள்ளும் மனநிலை ஆளும்தரப்புக்குக் கிடையாது.ஊடக சுதந்திரத்தை முடக்கும் வகையில் ஆளும்தரப்பு செயற்பட்டால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும், ஆளும்தரப்புக்கு எதிராக மக்களை வீதிக்கு இறக்குவோம்.

ஊடகத்துக்கு எதிராகப் பொலிஸார் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கும் நிலைமை இன்று காணப்படுகிறது. ஊடகங்கள் முறையற்ற வகையில் செயற்பட்டால் பொலிஸார் ஊடகத்துறை அமைச்சிடம் முறைப்பாடளிக்க வேண்டும். பொலிஸார் ஆளும்தரப்பின் நோக்கத்துக்கமைய ஒருதலைப்பட்சமாக செயற்படுகின்றனர் - என்றார்.

## தரமற்ற..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சி முழு ஆதரவு தரும். அடிப்படையானதும் மனித உரிமையாகவும் காணப்படும் சுகாதார நலன் கருதி, சேனக பிபில மருந்துக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டு மென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ், பதுளை மாவட்டம், மஹியங்கனை ஆதார வைத்தியசாலைக்கு 46.5 இலட்சம் ஷரூபா மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங்களை வழங்கும் நேற்று (28) இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில வருடங்களுக்கு முன்பு,இந்நாட்டில் மிகவும் ஊழல் நிறைந்த மற்றும் மோசடியான தரமற்ற மருந்துக் கொள்வனவு இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை,அதை நாட்டுக்கு வெளிக்கொணர்ந்து, அம்பலப்படுத்தி, அப்போதைய சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கூட ஐக்கிய மக்கள் சக்தியே கொண்டு வந்தது.

அப்போது நடந்து வந்த இந்தத் தரமற்ற மருந்து மோசடிகள் புதிய ஆளும்தரப்புடன் முடிவுக்கு வரும் என்றே கருதப்பட்டன. ஆனால் தற்போதைய ஆளும்தரப்பின் கீழும் தரமற்ற இந்த மருந்து மாபியா தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் தரமற்ற தடுப்பூசிகளால் இரண்டு பெண்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். தரமற்ற தடுப்பூசிகள் மற்றும் மருந்துப் பொருட்கள் கொள்வனவு மோசடி இன்றும் நடந்தே வருகிறது. மருந்துப் பொருட்கள் மோசடியைத் தொடர்வதற்கு தற்போதைய ஆளும்தரப்பிற்கு மக்கள் தமது ஆணையைப் பெற்றுத் தரவில்லை.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட ‘தித்வா‘ சூறாவளியால் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் மஹியங்கனை ஆதார வைத்தியசாலை கடுமையாகச் சேதமடைந்தது.

ஐக்கிய மக்கள் சக்தி தரம் குறைந்த மருந்துப் பொருட்கள் தொடர்பில் குரல் எழுப்பிய சமயங்களில், தற்போதைய ஆளும்தரப்பைச் சேர்ந்த அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட இதற்கு ஆதரவு தெரிவித்து மௌனம் காத்து வந்தனர். தரமற்ற மருந்துப் பொருட்கள் கொள்வனவை நிறுத்துவோம் என்று தேர்தல் மேடைகளில் கோஷங்களை எழுப்பிய தற்போதைய ஆளும் தரப்பு அமைச்சர்கள், இன்று மக்களுக்கு தரமற்ற மருந்துகளையும் தடுப்பூசிகளையும் விநியோகித்து வருகின்றனர். தற்போதைய சுகாதார அமைச்சர் உட்பட அனைத்து சுகாதார அதிகாரிகளும் இந்த மருந்துப் பொருட்கள் மாபியாவை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த மருந்துப்பொருள் மாபியாவால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பரிதாபமாக பலியாகி வருகின்றன. மருந்துகள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் போது, அவை தரமானதா,நுகர்வுக்கு ஏற்றனவா என தகுதிச் சான்றிதழ் வழங்கும் முன்னர், சுகாதார அமைச்சும் போலவே இந்த மருந்துகளின் தரம் தொடர்பில் உலக சுகாதார நிறுவனத்தின் பரிசோதனைகள் மூலமும் சர்வதேச நிறுவனங்கள் மூலமும் இவை ஆராயப்பட வேண்டும். நமது நாட்டில் இன்னும் மருந்துகளின் தரத்தை சரிபார்க்கக்கூடிய பரிசோதனை ஆய்வு கூடமோ வசதிகளோ இல்லை. இதற்கான ஆய்வு கூட வசதிகளை நாம் நிறுவ வேண்டும்.

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் தொடர்பான பொறுப்பிலிருந்து அமைச்சரும் உரிய அதிகாரிகளும் தப்பிக்க முடியாது. முன்னாள் அமைச்சரைப் போலவே தற்போதைய சுகாதார அமைச்சரும் இந்தப் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது. 220 இலட்சம் மக்கள் சார்பாக ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் வீதிகளில் இறங்கி, இந்த தரமற்ற மருந்து மோசடியை நடத்தும் அனைவருக்கும் எதிராகவும் இந்த மாபியாவிற்கு எதிராகவும் பேராடும்.

அவ்வாறே, இந்தத் தரமற்ற மருந்துப் பொருட்கள் மோசடியை ஒழிப்பதற்கு இந்த ஆளும்தரப்பு எடுக்கும் சிறந்த சகல நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சி முழு ஆதரவைப் பெற்றுத் தரும். அடிப்படையானதும் மனித உரிமையாகவும் காணப்படும் சுகாதார நலன் கருதி, சேனக பிபில மருந்துக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார்.

இந்த வைத்தியசாலையின் தேவைப்பாடுகளை அடையாளம் கண்டு ஷரூபா.38 இலட்சம் பெறுமதியான னுயைடழப ளுலைபெடநீரஅி ஒன்றும், ஷரூபா.7.6 இலட்சம் பெறுமதியான டீடரந னழவ சுழு ளுலளவநஅ 600பின இயந்திரமொன்றும் இன்று இவ்வாறு நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டன. சிறுநீரக நோயாளிகளின் நலன் கருதியே இந்த உபகரணத் தொகுதிகள் நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டன.

## அரசைப் பாதுகாக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வலையமைப்புகள்கூடச் சரியாக வேலை செய்யாததால் மக்கள் உயிரிழந்தனர். அவற்றைத் தீர்க்க வக்கற்ற ஆளும்தரப்பு, மக்களின் அந்தரங்கங்களை நோட்டமிட மட்டும் சட்டங்களைக் கொண்டுவருகிறது.

முன்னைய பயங்கரவாதத் தடைச் சட்டம் 6 மாதத்திற்கு எனக்கூறி கொண்டுவரப்பட்டு இன்னும் நீடிக்கிறது. அதேபோல் இந்தச் சட்டத்தையும் நிலைநிறுத்தவே ஆளும்தரப்பு முயல்கிறது. இந்த மக்கள் துரோகச் சட்டத்திற்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புத்த விகாரைசளை இன்னும் ஆதரித்து செயறபட்டு வருகின்றது. யாழ்ப்பாணம் தையிட்டியில் தனியாருக்குச் சொந்தமான காணிகளைப் பறிமுதல் செய்து, தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி, சட்டவிரோதமான முறையில் ஒரு பௌத்த ஆலயம் கட்டப்பட்டிருக்கின்றது.

நைனாதீவில் இருக்கும் நாகவிகாரையின் விகாராதிபதி, இந்தக் காணிகள் விகாரைக்கு உரித்தானதல்ல என்பதையும் அதில் கட்டப்பட்டிருக்கும் விகாரை சட்டவிரோதமானது என்பதையும் தமிழ் மக்கள் பௌத்தத்திற்கு எதிரானவர்களல்லர் என்பதையும் அவர்கள் தம்முடன் அன்புடன் பழகுகிறார்கள் என்பதையும் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருப்பதுடன் ஐம்பத்து மூன்று வருடங்களாக தாம் இந்தப் பிரதேசத்தில் வசித்து அந்த மக்களுடன் பழகிவருகிறேன் என்ற அடிப்படையிலும் தையிட்டி நாகவிகாரை கட்டுமானமானது சட்டவிரோதமானது என்றும் சிங்கள மக்களுக்கு சிங்கள மொழி மூலம் அளித்துள்ள பேட்டியில் கூறியிருக்கின்றார்.

நிலமை அவ்வாறிருக்க, சட்டவிரோதமான விடயங்களை ஏற்கமாட்டோம் என்று கூறுகின்ற இந்த ஆளும்தரப்பு சட்டரீதியாக அந்த மக்களுக்குச்சொந்தமான காணிகளைக்கொடுப்பதை விடுத்து, தொடர்ந்து அந்த மக்களுடன் பேரம் பேசுவதும் வேறிடத்தில் காணிகள் தருகிறோம் என்று கூறுவதும் சட்டவிரோதத்திற்குத் துணைபோவதாகவே பொருள்கொள்ளப்படும்.

வடக்கு-கிழக்கைப் பொறுத்தவரையில் பல இடங்களில், புராதான பௌத்த சின்னங்கள் இருக்கின்றன என்ற பெயரில் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு அங்கு புத்த கோயில்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இது பௌத்த நாடு, நாங்கள் விரும்பிய எதனையும் செய்யலாம் என்ற மனோபாவத்துடன் பெரும்பாலான பிக்குகளும் படையினரும் அவர்களுக்குச் சாதகமான அரசியல்வாதிகளும் செயற்பட்டு வருவதானது நாட்டின் ஒற்றுமைக்குக் குந்தகமானது என்பதை அவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத அரசியல் சாசனத்தில் பௌத்தத்திற்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கில் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள் ஆகியோரே மிகப் பெரும்பான்மையாக (6ஆம் பக்கம் பார்க்க...)


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 2026இன் உண்மையை எதிர்கொள்ளத் தயாரா?

இலங்கையின் பொருளாதாரச் சரிவில் சிக்கிக் கொண்ட பின்னர், அதன் மீட்பு, தொடக்கத்திலிருந்தே உறுதியான அடித்தளத்தில் அமைந்த ஒன்று அல்ல. அது ஒரு மெல்லிய கயிற்றில் நடக்கும் பயணமாகவே இருந்தது. கடுமையான வரி உயர்வுகள், செலவு வெட்டுக்கள், சர்வதேச நிதி நிறுவனங்களின் ஆதரவு, மக்களின் அளவற்ற பொறுமை ஆகியவற்றின் மேல்தான் அந்த "மீட்பு" கட்டுமானம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 'தித்வா' சூறாவளி அந்தக் கயிறு எவ்வளவு மெல்லியதென்பதை கொடூரமாக வெளிப்படுத்தியுள்ளது.

அரசின் தலைப்புச் செய்திகள் இன்னமும் "நிலைத்தன்மை", "வளர்ச்சி" என்று பேசினாலும், எண்கள் வேறு கதையையே சொல்கின்றன. 2022 இல் ஏற்பட்ட கடன் தவிர்ப்புக்குப் பின்னர் வலியுடனும் தியாகத்துடனும் பெறப்பட்ட சிறிய முன்னேற்றங்களைக்கூட, 'தித்வா' ஒரே அடியில் குலைத்துள்ளது. மீட்புக்கும் மறுவீழ்ச்சிக்கும் இடையில் நாடு இன்று ஆபத்தான சமநிலையில்தான் நிற்கிறது.

சர்வதேச நாணய நிதியம் (ஐஆகு), இலங்கை அடுத்த ஆண்டில் 4.2 சதவீத வளர்ச்சியை அடையும் எனக் கணித்திருந்தது. ஆனால் 'தித்வா'வின் நேரடி தாக்கத்தால் அந்தக் கணிப்பு 2.9 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது ஒரு சிறிய திருத்தமல்ல. இலங்கையின் மொத்த பொருளாதாரப் பாதையே மாற்றமடைந்துவிட்டதற்கான சான்று.

மேலும், அடுத்த 12 மாதங்களில் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை கூடுதலாக 720 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்கும் என்றும் சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது. வெளிநாட்டு நாணயக் கையிருப்புகளைச் சேர்க்கவே திணறும் நாட்டிற்கு இது கடுமையான அடியாகும்.

இதற்கிடையில், பணவீக்கத்தின் ஆபத்தான நிழல் மீண்டும் தோன்றத் தொடங்கியுள்ளது. உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு, குறிப்பிட்ட பிரிவுகளில் விலைகளை கணிசமாக உயர்த்தக்கூடும் என பன்னாட்டு நாணய நிதியம் எச்சரிக்கிறது. கடுமையான பணவியல் கொள்கைகள் மற்றும் மக்களின் தியாகம் மூலம் அடக்கப்பட்ட பணவீக்கம், அடுத்த ஆண்டு சராசரியாக 5.4 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது மத்திய வங்கியின் விருப்ப வரம்பை மீறுகிறது. இதன் பொருள் – அதிக உணவுக் கட்டணம், குறையும் உண்மை ஊதியம், குடும்பங்களின் வாழ்வாதாரப் போராட்டம் மேலும் தீவிரமாவது.

'தித்வா' வளர்ச்சியை மந்தப்படுத்துவதோடு மட்டுமல்ல, இலங்கையின் குறுகிய மீட்புப் பாதையையே மறித்து நிற்கிறது. வேளாண்மை மற்றும் சுற்றுலா இணைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 11 சதவீதத்தை உருவாக்குகின்றன. இந்த இரு துறைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் அழிந்துள்ளன. வழங்கல் சங்கிலிகள் முறிந்துள்ளன. வாழ்வாதாரங்கள் முற்றாக நாசமாகியுள்ளன. 58,000 ஹெக்டேருக்கும் அதிகமான நெற்பயிர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உணவு பாதுகாப்பு இனி ஒரு கோட்பாட்டு விவாதமல்ல் அது உடனடி நெருக்கடி.

வேளாண் ஏற்றுமதி குறையும் போது, உணவு இறக்குமதி அதிகரிக்கும். இது வெளிநாட்டு நாணய கையிருப்புகளின் மீது மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தும். இச்சூழலில், சிங்கள–தமிழ் புத்தாண்டுக்குள் நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடியில் சிக்கலாம் என்ற முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் எச்சரிக்கையையும் இங்கு கவனத்தில் எடுக்கவேண்டியுள்ளது.

உலக வங்கி வெளியிட்டுள்ள பேரிடர் சேத மதிப்பீட்டு அறிக்கை, 'தித்வா'வால் ஏற்பட்ட நேரடி சேதத்தை 4.1 பில்லியன் அமெரிக்க டொலராக மதிப்பிடுகிறது. இது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 4 சதவீதம். இதில், அடித்தள வசதிகள் மட்டும் 1.735 பில்லியன் டொலர் இழப்பைச் சந்தித்துள்ளன. வேளாண்மையில் 814 மில்லியன், வீடமைப்பில் 985 மில்லியன், கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் 562 மில்லியன் டொலர் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இவை உடனடி சேத மதிப்பீடுகள் மட்டுமே. உண்மையான அச்சம் மறுசீரமைப்புக்குத் தேவையான தொகையில் உள்ளது. அரசு மதிப்பீட்டின்படி, முழுமையான மறுகட்டமைப்புக்கு 6 முதல் 7 பில்லியன் டொலர் வரை தேவைப்படும். கடன் தவிர்ப்பிலிருந்து இன்னும் முழுமையாக மீளாத நாட்டிற்கு, இது ஒரு சாவுக்கும் வாழ்வுக்கும் இடையிலான சார்ந்த சவால்.

இந்த நிலையில்தான் எதிர்க்கட்சிகள் பன்னாட்டு நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் உடனடி மறுசீரமைப்பைக் கோருகின்றன. இங்கு எழும் கேள்வி, இலங்கை மீண்டும் கட்டியெழுப்ப முடியுமா என்பதல்ல. நாணய நிதியம் விதித்துள்ள கடுமையான நிதி ஒழுங்குகளைக் குலைக்காமல் அதைச் செய்ய முடியுமா என்பதே. 2026 பாதீடு ஏற்கனவே 2.3 சதவீத உபரிச் செலவுகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. கடன் சேவைகள் மீண்டும் தீவிரமாகத் தொடங்கவுள்ளன. மறுகட்டமைப்புக்காக பில்லியன் கணக்கான டொலர்களை திருப்பினால், அரசு ஒரு கொடூரமான தேர்வை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்– மக்களை மீட்டெடுக்கலாமா, கடன்களைச் செலுத்தலாமா?

இந்த இரட்டைச் சிக்கலே 2022 இன் பேய்களை மீண்டும் நினைவூட்டுகிறது. இன்று கையிருப்புகள் இருப்பதாகக் கூறப்பட்டாலும், அவை கடன் சேவைக்கும் திட்டப் பாதுகாப்புக்கும் என ஒதுக்கப்பட்டவை. அவற்றை மறுகட்டமைப்புக்கு பயன்படுத்துவது, வேறு வழியில் மீண்டும் வெளிநாட்டு நாணய தட்டுப்பாட்டை உருவாக்கலாம்.

பன்னாட்டு நாணய நிதியம் வழங்கிய 206 மில்லியன் டொலர் அவசர நிதி உதவி, நிலைநிறுத்தத்திற்கு உதவினாலும், அது நேரடி சேதத்தின் 5 சதவீதம் மட்டுமே. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உதவிகள் பெரும்பாலும் கடன்களாகவே உள்ளன. இதற்கிடையில், நாணய நிதியத்தின் ஆய்வு தாமதமானால், 347 மில்லியன் டொலர் நிதி விடுவிப்பு உறைந்து போகும். இது மீட்புக்கு மேலும் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கும்.

இந்தச் சூழலில், நோபல் பரிசு பெற்ற ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் உள்ளிட்ட பொருளாதார நிபுணர்கள் கடன் செலுத்துதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என வலியுறுத்துவது கவனிக்கத்தக்கது. 4 பில்லியன் டொலர் காலநிலை பேரழிவுக்கு முன் செய்யப்பட்ட கடன் ஒப்பந்தங்கள், இனி நிலைத்தவை அல்ல என்பதே அவர்களின் வாதம்.

'தித்வா', கட்டடங்களையும் வாழ்வாதாரங்களையும் மட்டுமல்ல் "நாம் மீண்டுவிட்டோம்" என்ற ஆறுதல் மாயையையும் சிதைத்துள்ளது. காலநிலை பேரழிவுகள் இனி அரிய நிகழ்வுகள் அல்ல. அவை தொடர்ச்சியான உண்மைகள். அந்த உண்மைக்கு ஏற்ப கடன் கட்டமைப்புகளும், நிதி இலக்குகளும் மாறாவிட்டால், இலங்கை போன்ற நாடுகள் எப்போதும் "ஒரு புயல் தூரத்தில்" உள்ள பொருளாதார பேரழிவிலேயே சிக்கி நிற்கும். இப்போது எழும் கேள்வி இதுதான் – இந்த மாயையை உடைத்து, உண்மையை எதிர்கொள்ள இலங்கையும், அதன் சர்வதேச கூட்டாளிகளும் தயாரா?

# சிறைகளில் நடந்த தேடுதலில் பெருமளவு அலைபேசிகள் மீட்பு

காலி, பூஸா அதி பாதுகாப்புச் சிறைச்சாலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளின் போது, பாதாள உலகக் குழுவை சேர்ந்த நபர்களால் பயன்படுத்தப்பட்ட பெருமளவான அலைபேசிகள் (மொபைல் போன்கள்) மற்றும் தடைசெய்யப்பட்ட உபகரணங்கள் என்பன அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளன.

பூஸா மற்றும் காலி அதிரடிப்படை முகாம் அதிகாரிகள், சிறைச்சாலை அவசரப் பிரிவு மற்றும் அரச புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுடன் இணைந்து இந்தச் சோதனைகளை முன்னெடுத்தனர். டிசெம்பர் 24 மற்றும் 27 ஆகிய திகதிகளில் சிறைச்சாலையின் விசேட பிரிவிலுள்ள அறைகள் மற்றும் அதனைச் சூழவுள்ள காணி சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. டிசெம்பர் 27 முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது, பெரும் குற்றங்களுடன் தொடர்புடைய 'லொகு பெட்டி' மற்றும் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 'தெமட்டகொட சமிந்த' ஆகியோரின் சிறைக்கூடங்களில் இருந்து பல கையடக்கத் அலைபேசிகள் மீட்கப்பட்டன.

லொகு பெட்டி தங்கியிருந்த அறையின் கூரைப் பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நான்கு ஸ்மார்ட் போன்கள், ஒரு சாதாரண அலைபேசி பவர் பேங்க், சிக்னல் பூஸ்டர்கள் மற்றும் சார்ஜர்கள் இதன்போது கைப்பற்றப்பட்டன. ஏனைய சில தொலைபேசிகள் கொன்கிரீட் சிலாப்புகளுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. அன்றைய தினம் மாத்திரம் 15 கையடக்கத் தொலைபேசிகள், 21 டேட்டா கேபிள்கள், 16 சார்ஜர்கள் மற்றும் சிம் கார்டுகள் உள்ளிட்ட பல பொருட்கள் அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, 2025 ஜனவரி 01 முதல் டிசெம்பர் 26 வரையான காலப்பகுதியில் பூஸா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட 72 சோதனைகளின் ஊடாக 133 கையடக்கத் தொலைபேசிகள், 159 சிம் கார்டுகள், ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் கத்திகள் உள்ளிட்ட பல்வேறு தடைசெய்யப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறைச்சாலையில் பொருத்தப்பட்டுள்ள சிக்னல் ஜேமர் ( ஆங்கிய சொற்பதம் தொலைதொடர்பு முடக்கி) கட்டமைப்பு முறையாக இயங்காமையினால் குற்றவாளிகள் தடையின்றி தொலைபேசிகளைப் பயன்படுத்தி வருவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சோதனை நடவடிக்கைகளின்போது சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் பிரதான சிறைக்காவலர் தவிர்ந்த ஏனைய கீழ்நிலை அதிகாரிகளிடமிருந்து போதிய ஒத்துழைப்பு கிடைப்பதில்லை என விசேட அதிரடிப்படை சுட்டிக்காட்டியுள்ளது. சில ஊழல் அதிகாரிகள் அதிரடிப்படையினரின் வருகையைத் தாமதப்படுத்தி, அது குறித்து கைதிகளுக்கு முன்கூட்டியே தகவல் வழங்குகின்றனர் எனவும், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கைதிகள் தமது சட்டவிரோதப் பொருட்களை மறைக்கின்றனர் எனவும் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும் சிறைச்சாலைக்குள் நிலவும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த விசேட அதிரடிப்படையினர் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஆளும்தரப்பு எம்.பி. – கான்ஸ்டபிள் மோதல் குறித்து பொலிஸ் விளக்கம்

சூரியகந்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கும், இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமாரவுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் அவரது மனைவி ஊடகங்களுக்கு வழங்கிய கருத்துக்களை மறுத்துள்ள பொலிஸ் தலைமையகம், இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் பக்கச்சார்பின்றி முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளது.

டிசெம்பர் 20 கொலொன்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில், பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் அவரது மனைவி ஆகியோர் அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தனர். இதன்போது, தமக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து பொலிஸார் முறையான விசாரணைகளை முன்னெடுக்கவில்லை என்றும், தாக்குதல் நடத்தியவர்கள் கைது செய்யப்படவில்லை என்றும் அவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ள பொலிஸ் ஊடகப் பிரிவு, சம்பவம் இடம்பெற்ற அன்றைய தினமே கொலொன்ன பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்து, உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிளைப் பொறுப்பேற்றதாகக் குறிப்பிட்டுள்ளது.

"இது தொடர்பாக எம்பிலிப்பிட்டிய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கமைய, தாக்குதல் நடத்தினார் என்று கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர், சம்பவத்தைப் நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் உத்தியோகத்தரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றவர் என சுமார் 10 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள வீடொன்றின் பாதுகாப்பு கமரா காட்சிகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பான அனைத்துத் தகவல்களும் டிசெம்பர் 22 அன்று எம்பிலிப்பிட்டிய நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது குறித்த உத்தியோகத்தர் பொலிஸ் தலைமையகத்தினால் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளும் தொடங்கப்பட்டுள்ளன. எம்பிலிப்பிட்டிய கோட்ட குற்றப் புலனாய்வுப் பணியகம் மற்றும் கொலொன்ன பொலிஸார் இணைந்து மேலதிக சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது" என்று பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் மதவாச்சியில் ஒருவர் சாவு

அநுராதபுரம் மதவாச்சி பகுதியில் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக அமைக்கப்பட்ட கட்டுத் துப்பாக்கி வெடித்ததில், அதனைப் பொருத்திய இளைஞன் ஒருவர் படுகாயமடைந்து உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடம்புகலவத்த பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் நபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த நபர் மதவாச்சிய பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞன் தனது விவசாய நிலத்தில் வனவிலங்குகளை வேட்டையாடும் நோக்கத்தில் அவரே குறித்த கட்டுத் துப்பாக்கியைப் பொருத்தியுள்ளார். எனினும், எதிர்பாராத விதமாக அந்தத் துப்பாக்கி வெடித்ததில் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் மேற்கொண்ட தொடக்க கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவத்தையடுத்து, காயமடைந்தவர் உடனடியாகச் செட்டிக்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அவரது நிலமை கவலைக்கிடமாக இருந்தமையால், மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். எனினும், வவுனியாவுக்குச் செல்லும் வழியில் அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்திருந்ததோடு வவுனியா வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் உள்ள புவரசங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இருந்தாலும் அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்தார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். இதேவேளை சம்பவம் தொடர்பில் மதவாச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வானிலை குறித்து அர நிறுவன அறிவிப்புக்களில் குழப்பநிலை

நாட்டில் இன்றும், நாளையும் மிகமோசமான காலநிலை நிலவும் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. ஆனால் பெரும் அச்சுறுத்தலான நிலை இல்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிடுகிறது. காலநிலை தொடர்பில் இவ்விரு தரப்பினருக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலநிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்த அறிவுறுத்தலை ஆளும்தரப்பு அலட்சியப்படுத்தியதன் விளைவை நாட்டு மக்கள் எதிர்கொண்டார்கள். ஆளும்தரப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் 'தித்வா' சூறாவளி தாக்கத்தால் பெரும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்காது.

நாட்டில் இன்றும் (திங்கட்கிழமை) நாளையும் (செவ்வாய்க்கிழமை) அசாதாரண காலநிலை நிலவும் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது. ஆனால் அவ்வாறு பெரும் அச்சுறுத்தல் ஏதும் கிடையாது. மழையுடனான காலநிலை மாத்திரமே நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

காலநிலை தொடர்பில் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிடுவது உண்மையா அல்லது வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிடுவது உண்மையா? இது அரச நிறுவனங்களுக்கிடையிலான முரண்பாட்டையும், பரஸ்பர வேறுபாட்டையுமே வெளிப்படுத்துகிறது – என்றார்.

# கணக்காய்வாளர் நாயகமாக தமக்கு சாதகமானவரை நியமிக்க ஆளும்தரப்பு எடுக்கும் நடவடிக்கை தவறு

## மரிக்கார் எம்.பி. சுட்டிக்காட்டு



அரசமைப்பின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதில் ஆளும்தரப்பு தோல்வியடைந்துள்ளது. அரசமைப்பு பேரவையின் சிவில் உறுப்பினர்களின் தற்போதைய பதவி காலம் நிறைவடைந்ததும், தனக்கு இணக்கமானவர்களை பேரவைக்கு நியமித்து அதன் பின்னர் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு தனக்கு சார்பானவரை நியமிக்க ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. இது முற்றிலும் தவறானதொரு செயற்பாடு என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு இன்னும் ஒரு கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்கத் தவறிவிட்டது. இருப்பினும், அரசுத் தலைவர் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஒரு பெயரை முன்மொழிய வேண்டும். அதன்படி, கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு தனக்கு நெருக்கமான இரண்டு நபர்களின் பெயர்களை அரசுத் தலைவர் முன்மொழிந்திருந்தார். அந்த இருவரின் பெயர்களும் அரசமைப்பு பேரவையால் நிராகரிக்கப்பட்டன.

சுயாதீன கணக்காய்வாளர் திணைக்களத்தில் கணக்காய்வாளர் நாயகம் பதவி வெற்றிடமாகியுள்ள நிலையில் சுமார் 8 மாதங்கள் கடந்தும் கணக்காய்வாளர நாயகம் பதவிக்கான நியமனம் வழங்கப்படவில்லை.

மேலும் பதில் நாயமாக பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர் அந்தப் பதவிக்கு பொருத்தமானவர் அல்ல என்றால், அவர் ஏன் பொருத்தமானவர் அல்ல என்பதற்கான காரணத்தை ஆளும்தரப்பு வெளிப்படுத்த வேண்டும்.

எதிர்வரும் ஜனவரி முதல் அரசமைப்பு பேரவையில் இருக்கும் சிவில் பிரஜைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று உறுப்பினர்கயின் பதவி காலம் நிறைவடையும். இந்த மூன்று பேரும் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் ஒப்புதலுடன் நியமிக்கப்பட வேண்டும்.

அதன்படி, பிரதமரின் அதிகாரங்களுக்கு இணங்க, ஆளும்தரப்பிற்கு நெருக்கமான மூன்று பேரை நியமிக்கவும் ஆளும்தரப்பு கடுமையான முயற்சியை மேற்கொண்டு வருகிறது. ஆளும்தரப்பிற்கு நட்பான ஒருவரை கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்க ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது.

அரச கணக்காய்வை முறையாக நடத்த தகுதியான ஒருவரின் பெயரை கணக்காய்வாளர்நாயகம் பதவிக்கு முன்மொழியுமாறு ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம். தற்போதைய அரசமைப்புப்பேரவை முறையாக செயல்பட்டு வரும் நிலையில், ஆளும்தரப்பால் ஆளும்தரப்பிற்குத் தேவையானவர்களை அந்தப் பதவிகளில் நியமிக்க முடியவில்லை.

எனவே, அரசமைப்பு பேரவையில் அமைப்பு மாறும் வரை இந்த விடயத்தை இழுத்தடிக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், இதுபோன்ற நடவடிக்கைகள் ஆளும்தரப்பின் ஊழல் மற்றும் மோசடியை அம்பலப்படுத்துகின்றன. ஆளும்தரப்பால் அவற்றைத் தடுக்க முடியவில்லை. ஆளும்தரப்பின் நிர்வாகம் நாளுக்கு நாள் பலவீனமடைகிறது.

பேரிடர் ஏற்பட்டு ஒரு மாதம் நிறைவடைந்துள்ளது. முதல் சுற்றில் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 25000 வழங்கப்படும் என்று ஆளும்தரப்பு அறிவித்தது. ஆனால் ஏராளமான மக்கள் இன்னும் அந்தப் உதவித் தொகை கிடைக்கவில்லை.

வீடுகள் சுத்தம் செய்யப்பட்டு மக்கள் குடிபெயர்ந்த பிறகு 50,000 ஷரூபா வழங்கப்படும். மக்களுக்கு இன்னும் அந்தப் பணம் கிடைக்கவில்லை. ஆளும்தரப்பால் இந்தப் பணியையும் முறையாகச் செய்ய முடியவில்லை.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் மசட்டத்தை மதித்து கண்ணியமான நாட்டை உருவாக்குவதாக அறிவித்தது. இருப்பினும், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மேர்வின் சில்வா மற்றும் லோஹான் ரத்வத்தே போன்றவர்களும் உள்ளார்கள் எதிர்காலத்தில், திஸ்ஸ குட்டியாராச்சி போன்றவர்களையும் ஆளும்தரப்பு இணைத்துக் கொள்ளும் என்றார்.

# மிஹிந்தலை விகாரைக்கான ஆபத்தை ஆளும்தரப்புக் கண்டுகொள்ளவில்லை

## அங்குள்ள விகாராதிபதி குற்றச்சாட்டு

மிஹிந்தலை ரஜமகா விகாரையின் வரலாற்றுச் சிறப்புமிக்க தூபிகள் மற்றும் தர்மசாலைகள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக புவியியல் வல்லுநர்கள் எச்சரித்துள்ள போதிலும், ஆளும்தரப்பு இதுவரையில் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை என மிஹிந்தலை ரஜமகா விகாராதிபதி வலவாஹெங்குணவெவே தம்மரதன தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

மஹிந்தலையில் சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த சில நாட்களுக்கு முன்னர், மிஹிந்தலை புனித பூமியில் பூசைகளுக்காகப் பயன்படுத்தப்படும் மலர் ஆசனத்தை தேசிய மக்கள் சக்தியின் மிஹிந்தலை தொகுதி வேட்பாளர் நாமல மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த சிவில் அதிகாரி ஒருவரும் இணைந்து சேதப்படுத்தியுள்ளனர். இது குறித்து மிஹிந்தலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு பலமுறை அழைப்பு விடுத்தும் அவர் பதிலளிக்கவில்லை. பொலிஸார் அரசியல்வாதிகளின் தாளத்திற்கு ஆடுகின்றனர். பொலிஸ் நிலையத் தொடர்பு இலக்கத்திற்கு அழைத்தபோது, அங்குள்ள உத்தியோகத்தர் அனுப்புவதற்கு எவரும் இல்லை என பதிலளித்தார். குற்றவாளிகளைப் பாதுகாக்கும் வகையில் பொலிஸார் செயற்படுவது கண்டிக்கத்தக்கது. நாம் எப்போதும் உண்மையை மட்டுமே பேசுகின்றோம். இந்த ஆளும்தரப்பிற்கு மாத்திரமல்ல, கடந்த ஆளும்தரப்பின் போதும் நாம் தவறுகளைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. கடந்த ஆட்சிக்காலத்தில் அன்றைய பிரதமர் தினேஷ் குணவர்தனவை விகாரையில் அமரவைத்துக்கொண்டு, மக்களின் தேவைகளை நிறைவேற்றாவிட்டால் பிணக்குழிகளிலும் இடி விழும் என நான் நேரடியாகவே எச்சரித்திருந்தேன். நாம் எவருக்கும் அச்சப்படவும் இல்லை, எவருக்கும் கடன்பட்டவர்களும் இல்லை. மக்கள் பக்கமே நாம் எப்போதும் நிற்கின்றோம்.

ஆளும்தரப்பின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதாலும், உண்மையை உரக்கப் பேசுவதாலும் என்னையும், மகாநாயக்க தேரர்களையும் இலக்கு வைத்து சமூக வலைத்தளங்களில் திட்டமிட்ட மட்டரகமான அவதூறு பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. நான் இஸ்லாம் மதத்திற்கு மாறிவிட்டேன் எனவும், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பிருப்பதாகவும் ஆயிரக்கணக்கான போலி கணக்குகள் மூலம் சித்தரிக்கின்றனர். என் மீது ஏதேனும் குற்றச்சாட்டுகள் இருப்பின், அதனை தைரியமாக பொலிஸிலோ அல்லது நீதிமன்றத்திலோ நிஷரூபிக்குமாறு நான் சவால் விடுக்கின்றேன். மிஹிந்தலை 'கட்டுசாய' பகுதியில் அமைந்துள்ள உண்டியல்கள் உடைக்கப்பட்டுள்ளன. புனித பூமியின் மேற்கு நுழைவாயில் பகுதியில் யாரும் இல்லாத வேளையில் அழுகிய முட்டைகள் எறியப்படுவதுடன், கோழிகள் அறுக்கப்பட்டு குருதி மற்றும் சாணங்கள் பூசப்பட்டு புனிதத் தன்மை சீர்குலைக்கப்படுகின்றது. இவ்வளவு பெரும் பரப்பளவைக் கொண்ட புனித பூமிக்கு வெறும் நான்கு பொலிஸாரைக் கொண்டு எவ்வாறு பாதுகாப்பு வழங்க முடியும்? இச்சம்பவங்கள் குறித்து நான் பொலிஸ் மா அதிபர், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் , பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் அர சுத் தலைவர் ஆகியோருக்கு முறைப்பாடுகளை முன்வைத்துள்ளேன். எனினும் இதுவரை எவ்வித நீதியும் கிடைக்கவில்லை. நாடாளுமன்றத்தில் 159 உறுப்பினர்களின் பலத்தைக் கொண்டுள்ள இந்த ஆளும்தரப்பு, நாட்டை மாற்றப்போவதாகக் கூறிக்கொண்டு இவ்வாறான அழிவுகளை வேடிக்கை பார்ப்பது கவலையளிக்கிறது. மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளைக் கூட செவிமடுக்காத ஒரு நிர்வாகமே இன்று முன்னெடுக்கப்படுகின்றது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.



## வடக்கு....

வாழ்கின்றனர். மிகச் சொற்பமான அளவில் சிங்கள பௌத்த மக்களும் வாழ்கிறார்கள். ஆகவே, அத்தகையதோர் பிரதேசத்தில் பௌத்தத்திற்கு முதலிடம் இருக்க வேண்டும் என்பது ஜனநாயகபூர்வமானதுமல்ல நியாயமானதுமல்ல.

வடக்கு-கிழக்கில் தற்பொழுது கட்டப்பட்டுவரும் புத்தகோயில்களின் சுற்றாடல்கள் அனைத்துமே தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்களாகும். இந்தப் பிரதேசங்களில் சிங்கள பௌத்த மக்கள் எவருமே கிடையாது. இவ்வாறான இடங்களில் புத்தகோயில்களைக் கட்டுவதென்பது புத்த பெருமானை அவமதிப்பதும் பௌத்தத்திற்குத் தீங்கு விளைவிக்கும் செயலுமாகும். உங்களது இந்தக் கட்டுமானங்கள் அனைத்தையும் நோக்குகின்றபொழுது வடக்கு--கிழக்கில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுகின்ற உங்களது நோக்கம் எங்களுக்குப் புரிகின்றது. ஒருபுறத்தில் சமத்துவம், சகோதரத்துவம், இனங்களுக்கிடையில் ஐக்கியம் பற்றிப் பேசும் உங்கள் ஆளும்தரப்பு, இவ்வாறான நடவடிக்கைகளுக்குத் துணைபோவதென்பது நீங்கள் பேசுகின்ற விடயங்களை நிர்மூலமாக்குமே தவிர, நாட்டில் ஐக்கியத்தை உருவாக்காது என்பதை தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள் என்றுள்ளது.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான சந்திப்புக்களில் அமைச்சர் மனுவைக் கையேற்பதில்லை என்ற இந்திய உயராணையரகத்தின்

அறிவுத்தலுக்கமையவே சந்தோஷ் ஜாவிடம் மனு கையளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் அடிப்படை நோக்கம்,தேவையற்ற கால தமாதமாகியுள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்த இலங்கை ஆளும்தரப்பிற்கு இந்தியா வலியுறுத்த வேண்டும் என்பதே ஆகும். மாகாண சபை தேர்தலை நடத்த நானும் ஏனையவர்களும் வலியுறுத்தினோம்.

சமஷ்டியை பற்றி நாங்கள் பேசவில்லை என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்து ஆச்சரியமளிக்கிறது.

கலந்துரையாடலை ஆரம்பித்து நானே. கலந்துரையாடலின் இறுதியில் சமஷ்டியை பற்றி பேசினோம். பல விடயங்களைப் பேசினோம். சந்திப்பு முடிகிற தருணத்தில் அரசுத் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவிடம் நாம் முன்வைத்த கடிதத்தின் நோக்கத்தை மீண்டும் ஜெய்சங்கருக்கு தெளிவுபடுத்தினோம்.

மாகாண சபையைப் பொறுத்தவரை இந்தியா இலங்கையுடன் செய்த ஒப்பந்தம் மூலமே அது உருவானது. இந்தியாவின் வயிற்றில் பிறந்த பிள்ளை என சொல்லவில்லை. இந்தியாவின் சிந்தனையில் வந்த பிள்ளை என்றேன். அதை வலியுறுத்தவே மனுவையும் கையளித்தோம். அதேபோல குறித்த சந்திப்பில் எமது இறுதி இலக்கும் நோக்கும் கூட்டாட்சி சமஷ்டிதான் என்பதையும் தெரிவித்தோம். மனுவில் இந்த விடயம் இருக்கிறது.

நாங்கள் பொய் சொன்னோம் ஏன்று கஜேந்திரகுமார்ம் சொல்கிறார். நான் உண்மையை தான் கூறுகிறேன். சந்திப்பில் பங்கேற்ற ஏனைய கட்சித் தலைவர்கள் இதைத் தெளிவுபடுத்துமாறு வலியுறுத்தினார்கள். சர்வதேச ரீதியில் எமது இலக்கை அடைவதற்கான ஆதரவு தேவை. இந்தியா இதற்கு உதவ வேண்டும் எனச் சந்திப்பில் சொன்னோம்.

நான் சொன்னது பொய் என்றால் இந்தியா மறுதலிக்கும். இராஜதந்திரிகள் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல மாட்டார்கள். செயலிலேயே அதைக் காட்டுவார்கள். நாங்கள் சமஷ்டிக் கட்சி, ஆகவே சமஷ்டியை பற்றி பேசாமல் விடுவோமா? நாங்கள் சந்திப்பின் பின்பகுதியில் அதனை வலியுறுத்தினோம். அரசமைப்பின் 13ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் முடங்கி போகும் எனச் சொல்லிக்கொள்ளும் கஜேந்திரகுமார், ஆனால் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவோம் என்கிறார். இதுவே உண்மையில் சுய முரண்பாடு. மாகாண சபை முறைமையை ஒரு அரசியல் தீர்வு என்றோ அதனை முழுமையாக ஏற்கிறோம் என்றோ ஒரு காலத்திலும் தமிழ் அரசுக் கட்சி சொன்னதில்லை. உண்மைக்கு புறம்பான முறையில் பேசுவது அரசியல் ஜனநாயகத்துக்கு முரண்.

மன்னாரில் இருக்கக்கூடிய சூரிய சக்தி ஆலைகளை அமைப்பதில் பாகிஸ்தானை சேர்ந்த 40 பேர் பணியில் ஈடுபடுகின்றனர் என்பதையும் நாங்கள் சந்திப்பின்போது தெரிவித்தோம் - என்றார்.

## ஜனவரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

33ஆம் இலக்க துப்பாக்கிகள் கட்டளைச் சட்டத்தின் கீழும் 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச் சொத்து துஸ்பிரயோகச் சட்டத்தின் கீழும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படிருந்தன.

இதனை விட தண்டனை சட்டக் கோவையின்

386 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிட்டப்படடுள்ள முறையற்ற அல்லது தவறான பயன்பாடு தொடர்பிலும் டக்ளஸ் தேவானந்தா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் டக்ளஸ் தேவானந்தாவை நீதி மன்றில் முற்படுத்திய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனிதப் படுகொலைகள் குறித்த விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கோரியதுடன் இந்த விவகாரத்தில் விரிவான விசாரணை ஒன்று இடம்பெறுவதாகவும் தெரிவித்தனர்.

சந்தேகநபரான டக்ளஸ் தேவானந்தா சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் அவரின் நோய் நிலமைகள் தொடர்பில் மன்றில் விடயங்களை முன்வைத்துப் பிணைக் கோரினர். எனினும் பிணைக் கோரிக்கையை நிராகரித்த மேலதிக நீதிவான் பத்மா அமரதுங்க டக்ளஸ் தேவானந்தவை ஜனவரி 9 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். அத்துடன் டக்ளஸ் தேவானந்தவுக்கு சிகிச்சைகள் அவசியமாயின் அது தொடர்பில் சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக உரிய நடவடிக்கைகளை எடுக்க முடியும் எனவும் நீதிவான் சுட்டிக் காட்டினார்.

முன்னதாக, 2019 ஆம் ஆண்டு பிரபல பாதாள உலக நபரான மாகந்துரே மதுஷ் குற்றப் புலனாய்வுத் துறையினால் கைது செய்யப்பட்டிருந்தபோது அவரது வாக்குமூலத்திற்கு அமைய வெளிவேரிய பொலிஸ் பிரிவில் மறைத்து வைக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகள் மீட்கப்பட்டிருந்தன. அதில் ஒரு துப்பாக்கி இராணுவத்தால் 2001 ஆம் ஆண்டு டக்ளஸ் தேவானந்தவுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது என்பது தெரியவந்த நிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த டக்ளஸ் தேவானந்தா கைது செய்யப்பட்டார். இந்த நிலையில் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஈபிடிபி கட்சியின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டதாக கூறப்படும் மேலும் 20 துப்பாக்கிகள் தொடர்பிலான விசாரணைகளையும் பொலிஸார் தொடங்கியுள்ளனர்.

# அரச பல்கலைக்கழக விடுதிகளில் போதுமான பாதுகாவலர்கள் இல்லை

## இதனால் பல்வேறு பிரச்சினைகள் எனச் சுட்டிகாட்டு

அரச பல்கலைக்கழக விடுதியில் போதுமான பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்படாததால், பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாக அந்த விடுதிகளின் துணை நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் சம்பந்தமாக அவர்கள் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

விடுதிகளின் பாதுகாப்பு, தனியார் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் கடந்த ஆறு மாதங்களாக தேவையான எண்ணிக்கையில் பாதுகாப்பு அதிகாரிகள் பணியில் அமர்த்த படவில்லை.

இந்த நிலை காரணமாக மாணவர்கள் மற்றும் விடுதி நிர்வாகிகளும் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக பல்கலைக்கழக உயர் அதிகாரிகளுக்கு பல முறை அறிவித்திருந்தாலும் இதுவரை உரிய தீர்வுகள் வழங்கப்படவில்லை.

இதேவேளை அகில இலங்கை விடுதி துணை நிர்வாகிகள் சங்கத்தின் பேச்சாளர் கருத்து தெரிவிக்கையில், நாடு முழுவதும் உள்ள ஏழு அரச பல்கலைக்கழகங்களில் சுமார் 200 வெளிப்புற மற்றும் உட்புற விடுதிகள் உள்ளன, அவற்றின் பாதுகாப்புக்காக அந்தந்தப் பல்கலைக்கழகங்கள் தனியார் நிறுவனங்களை தெரிவு செய்துள்ளன .

பெண் விடுதிகளுக்கு ஒரு ஆண் மேற்பார்வையாளரும், பெண் பாதுகாப்பு அதிகாரி ஒருவரும், ஆண் விடுதிகளுக்கு ஆண் மேற்பார்வையாளர் நியமிக்கப்பட வேண்டும் என்ற வகையில் பல்கலைகழகங்களும், தனியார் நிறுவனங்களும் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

மேலும் ஒரு பாதுகாப்பு அதிகாரி தினசரி 12 மணித்தியாலங்கள் பணி நேரம் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், அதிகாரிகள் பற்றாக்குறை காரணமாக 24 மணி நேரம் தொடர்ச்சியாக பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒருவர் 12 மணித்தியாலங்கள் பணியை முடித்த பின்னர் வேறு அதிகாரியை நியமிக்க பாதுகாப்பு நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அத்துடன் ஒரு துணை நிர்வாகிக்கு மூன்று விடுதிகளின் பொறுப்புக்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது, பாதுகாப்பு அதிகாரிகள் இல்லாமை காரணமாக மாணவர்களின் ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பது உள்ளிட்ட பல பிரச்சினைகள் எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு அதிகாரிகளை நியமிப்பது, அவர்களுக்கு சம்பளம் வழங்குவது தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் பொறுப்பாகும் என்றார்.

## பேரிடரால் சீரழிந்த

# தொடருந்து மார்க்கத்தில் 79 சதவீதம் மறுசீரமைப்பு

'தித்வா' சூறாவளி, மண்சரிவு மற்றும் வெள்ளத்தால் சேதமடைந்த தொடருந்துப் பாதையில் 79 சதவீதமான பாதைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. மலையக தொடருந்து பாதைகள் கட்டம் கட்டமாக சீரமைக்கப்படுகிறது என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

தொடருந்து பாதைகள் சீரமைப்பு குறித்து செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

நாட்டில் கடந்த மாதம் ஏற்பட்ட இயற்கை இடர்களால் தொடருந்து மார்க்கத்தில் 1593 கிலோ மீற்றர் வரையான பாதைகள் சேதமடைந்ததன. அவற்றில் 1254 கிலோ மீற்றர் வரையான மார்க்கம் சீரமைக்கப்பட்டுள்ளதாக தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் மலையகம், புத்தளம் மற்றும் தலைமன்னார் தொடருந்து மார்க்கங்களில் தொடர்ந்தும் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. அதற்கமைய, தலைமன்னார் மார்க்கமானது மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரை பல பகுதிகள் சேதமடைந்துள்ளன.

அதனைச் சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இயலுமான அளவில் அதனை விரைவில் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்வரும பெப்ரவரி மாதமளவில் கொழும்பு - தலைமன்னார் தொடருந்து சேவை ஆரம்பிக்கப்படும்.

மலையக தொடருந்து சேவை மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. ரம்புக்கனையிலிருந்து பேராதனை ஊடாக மாத்தளை வரையான தொடருந்து பாதை, ரம்புக்கணையில் இருந்து பேராதனை ஊடாக அம்பேவல வரையான பாதையும் தொடர்ந்தும் போக்குவரத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் உள்ளது. அத்துடன் புத்தளம் ரயில் மார்க்கத்தில் நாத்தான்டியாவிலிருந்து புத்தளம் வரையான தொடர்ந்து மார்க்கமும் சேதமடைந்துள்ளது.

சேதமடைந்த தொடருந்து பாதைகளில் 79 சதவீதமானவை தற்போது சீரமைக்கப்பட்டுள்ளன. சீரமைப்பு பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. வெகுவிரைவில் தொடருந்து சேவை வழமைக்குத் திரும்பும் என்றார்.




முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# JRIDE

இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA







இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!

www.jride.lk